"மழைநீர் சேமிப்போம்" " பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி – அல்லிநகரம் ,
நாள் : 14.08.2020.

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 சார்வரி, ஆடி மாதம் 30 -ம் நாள் 14.08.2020 வெள்ளிக்கிழமை காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சி கிழக்கு சந்தையில் புதிதாக கட்டப்பட்ட கடை எண்: 17 வாடகைக்கு விடுவதற்கு 07-08-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.K.விக்னேஸ்வரன்,<br>த/பெ. காளிச்சாமி,<br>6/1/67,<br>முருகன் கோவில் பின்புறம்,<br>முத்துதேவன்பட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு ரூ:3,850/- |

அலுவலக குறிப்பு :-

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:1-ல் கண்ட திரு.K.விக்கேஸ்வரன் என்பவர் மாத வாடகையாக ரூ:3,850/- உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே 29-11-2019, 03-01-2020, 14-01-2020, 29-01-2020, 07-02-2020, 28-02-2020, 06-03-2020, 27-03-2020, 22-05-2020, 09-06-2020, 19-06-2020, 26-06-2020, 17-07-2020 மற்றும் 29-07-2020 தேதிகளில் பலமுறை ஏலம் கோரப்பட்டும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. தற்போது 07-08-2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட கடைக்கு ரூ:3,850/- ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. ஏற்கனவே பலமுறை ஏலம் கோரப்பட்டும் எவரும் ஏலம் கோர முன்வராததாலும், மேலும் நகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும் மேற்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 1107 / 2020 / அ-3

**தீர்மான எண்:** 1506
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 02 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டம் ரூ. 42.09 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு 08.06.2015-ம் தேதி முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 4212 / UGSS - 1 / 2018, நாள் : 19.02.2018 - ல் தமிழ்நாடு நகர்புறச் சேவை கட்டமைப்பு நிதி இணையத்தின் மூலம் ( TUFIDCO Interest Free Loan ) வட்டியில்லா கடன் அடிப்படையில் 16209 வீட்டு இணைப்புகளுக்கு பாதாளச்சசாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு மதிப்பீடுத்தொகை ரூ. 640.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 18281 / 2016 / DO1 , நாள். 22.02.2018 -ல் ரூ.640.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இப்பணிக்கு M/S Ujwala Infratech ( India ) Pvt Ltd திருப்பதி, ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வரும் நிலையில், இந்நகரில் ஏற்கனவே பாதாள சாக்கடை பைப் லைன் பதிக்கப்பட்டு, விடுபட்ட குறுக்கு சந்துகளில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்கும் பொருட்டு பைப் லைன் மற்றும் ஆள் இறங்கும் குழிகள் ( Man Holes ) அமைத்து குடியிருப்புகளுக்கு இணைப்புகள் (Internal Plumbing) வழங்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மேற்படி பணிக்கான கூடுதல் இனங்களுக்கு ( Supplemental Works ) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்ட நடவடிக்கை நாள். 08.02.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விபரத்தின் அடிப்படையில், தற்போது முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 1473 / 2020 / DO2, நாள். 31.07.2020-ல் கூடுதல் இனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகரில் பல இடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆள் இறங்கும் குழியின் மட்டத்திற்கு புதியதாக பைப் லைன் பதித்து பணி மேற்கொள்ள Level Permit ஆகாத நிலையில் இருப்பதால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 16209 குடியிருப்புகளில் தற்போது 9281 குடியிருப்புகளுக்கு மட்டும் பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்கும் நிலையில் உள்ளது.

எனவே தற்போது நகரில் ஏற்கனவே பைப் லைன் பதிக்கப்பட்டு விடுபட்ட பகுதிகளில் சுமார்

8.55 கிலோ மீட்டர் நீளத்திற்கு ( ஆள் இறங்கும் குழிகள் உட்பட ) புதியதாக பைப் லைன் பதித்தல் பணியும், மற்றும் 9281 எண்ணிக்கை குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்க இயலும் என்ற நிலையில் உள்ளதால், கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள திருத்திய பணிக்கு மதிப்பீடு தொகை ரூ. 640.00 இலட்சத்திற்கு தற்போது விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ( ரூபாய் இலட்சத்தில் )** |
|---|---|---|
| 1 | 9281 குடியிருப்புகளுக்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்கும் பணி மற்றும் விடுபட்ட பகுதியில் பாதாள சாக்கடை பைப்லைன் பதித்தல் மற்றும் ஆள் இறங்கும் குழிகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 640.00 |

மேற்படி திருத்திய பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 640.00 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3354 / 2018 / இ**3**

**தீர்மான எண்:** 1507
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

## **பொருள் 03 :**

கோவிட் **2019** எனும் உயிர்க்கொல்லி நோய் தாக்கி அரசு ஊழியர்கள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வந்தால் அன்னார்க்கு ரூ.**2.00** இலட்சம் மானியமாக வழங்க அனுமதித்து வரப்பெற்ற அரசாணை G.O.(Ms) No.180. dated:-04.04.2020, Revenue And Disaster Management Dept Disaster Management Wing, D.M.I.Section மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண். 1563 / 2020 / சி**1**

**தீர்மான எண்:** 1508
**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

## பொருள் 04 :

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 -ம் ஆண்டு பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1065 / 2020 / தி6, நாள்: 13.08.2020-ம் தேதிய செயல்முறைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மற்றும் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ( ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சியில் அல்லிநகரம் பேருந்து நிறுத்தத்தில் பயணியற் நிழற்குடை கட்டுதல் | 8.00 |

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1842 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1509
**தீர்மானம் :** அ ) பதிவு செய்யப்பட்டது, ஆ ) அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி